பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
16 12 2025 **TUESDAY** 6 30 **PM**
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஜோர்டானுடனான வர்த்தகம், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 5 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், தேர்தல் ஆணையத்தின் அரசியல் சாசன அதிகாரத்திற்கு உட்பட்டது என்று மத்திய அமைச்சர் திரு. ஜெ. பி. நட்டா கூறியுள்ளார்.
- தமிழகத்தில் இன்னும் மூன்று மாதங்களில் கூடுதலாக ஆயிரம் மின் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

ஜோர்டானுடனான வர்த்தகம், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 5 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்

ஜோர்டான் தலைநகர் அம்மானில் அந்நாட்டு அரசர் அப்துல்லாவுடன் இணைந்து, இருநாட்டு வர்த்தக நிபுணர்களிடையே உரையாற்றிய அவர், இந்தியா உலகிலேயே மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்து வருவதாக கூறினார்.

இந்தியாவில் முதலீடு செய்ய, ஜோர்டான் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்த பிரதமர், இருநாடுகளும் இணைந்து பொருளாதார வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், வேளாண்மை, பொது கட்டமைப்பு, நிதித்துறை உள்ளிட்டவற்றில் இந்தியாவும், ஜோர்டானும் இணைந்து செயல்பட வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், தேர்தல் ஆணையத்தின் அரசியல் சாசன அதிகாரத்திற்கு உட்பட்டது என்று மத்திய அமைச்சரும், மாநிலங்களவை முன்னவருமான திரு. ஜெ. பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான விவாதத்தில் இன்று உரையாற்றிய அவர், வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொண்டு சீர் செய்வது, தேர்தல் ஆணையத்தின் கடமை என்று குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணையம், உச்சநீதிமன்றம் உள்ளிட்ட அரசியல் சாசன அமைப்புகள் நாட்டின் ஜனநாயகத்தில் தூண்களாக விளங்குவதாக திரு. ஜெ. பி. நட்டா கூறினார்.

முன்னதாக, விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திரு. பிரஃபுல் பட்டேல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மிகவும் பாதுகாப்பானது என்றும் அதில் முறைகேடு செய்ய இயலாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. டெரிக் ஓ ப்ரையன் பேசும்போது, வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், மக்களை திசை திரும்பும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

விவாதத்தின் நிறைவாக பேசிய மாநிலங்களவை முன்னவர் திரு. ஜெ.பி. நட்டா, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி, பீகார் மாநிலத்தில் மேற்கொண்ட பிரச்சாரத்தை மக்கள் ஏற்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

திரு. ஜெ.பி. நட்டாவின் உரைக்குப் பிறகு, தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விவாதம் முடிவுற்றது.

>>>>>><<<<<<

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், இதுவரை 21 தவணைகளில் 4 லட்சத்து 9 ஆயிரம் கோடி ரூபாய் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டம் வாயிலாக ஏராளமான விவசாயக் குடும்பங்கள் பயன்பெற்று வருவதாக கூறினார்.

மாநிலங்களின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான விவசாயிகளை தெரிவு செய்வதும், நிதி ஒதுக்கீடு செய்வதும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

தகுதியுள்ள விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகளின் நில மற்றும் ஆதார் விவரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதுவரை ஒரு கோடியே 32 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்துள்ளதாகவும், ஒரு கோடியே 16 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் பயன்கள் முழுமையாக சென்றடைந்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் புதிய தொழில் தொடங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், இந்த ஆண்டு அக்டோபர் 31ஆம் தேதிவரை ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 692 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய தொழில் தொடங்கிய நிறுவனங்கள், நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டதாக கூறிய அவர், மொத்தம் 6 ஆயிரத்து 385 நிறுவனங்கள் நஷ்டமடைந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வெறிநாய்க்கடியால் ஏற்படும் ரேபிஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கான திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், 2030ஆம் ஆண்டுக்குள் வெறிநாய்க்கடி நோய்க்கு முழுமையான தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, ராஜஸ்தான், மேகாலயா, மிஸோரம் நாகாலாந்து மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் இந்த திட்டம் முழுஅளவில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெறிநாய்க்கடி மற்றும் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டவர்கள் உதவிபெறுவதற்காக 1 5 4 0 0 என்ற அவசர தொலைபேசி எண் குறிப்பிட்ட மாநிலங்களில் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் இன்னும் மூன்று மாதங்களில் கூடுதலாக ஆயிரம் மின் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தனியார் பல்கலைக் கழகத்தில் சர்வதேச நானோ தொழில்நுட்பங்கள் குறித்த மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், சென்னையில் 225 மின்பேருந்துகள் இயக்கப்படுவதாக தெரிவித்தார்.

ஆராய்ச்சிக் கல்விக்கு 65 ஆயிரம் ரூபாய் வரை உதவித் தொகை வழங்கி வருவதாக கூறிய அமைச்சர், முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளுக்காக ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வரை உதவித் தொகையை வழங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த மாநாட்டில் 20 நாடுகளைச் சேர்ந்த 300 விஞ்ஞானிகள் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவைப்படும் உதவிகள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருவதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி, 206 மாற்றுத் திறனாளிகளுக்கு 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக ஆயிரத்து 852 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக திருமதி கீதாஜீவன் கூறினார்.

>>>>>><<<<<<

இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 13 தமிழக மீனவர்கள் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

கடந்த மாதம் 9ஆம் தேதி கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் அங்குள்ள தூதரகம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

மீனவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன, ஆனால் அவை விடுவிக்கப்படவில்லை.

சென்னை வந்து சேர்ந்த மீனவர்களை, அவர்களின் சொந்த ஊருக்கு அனுப்பும் பணியை மாநில மீன்வளத்துறை மேற்கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்திலும் புதுச்சேரியிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

திருநேல்வேலி, தென்காசி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அரசு துறை சார்ந்த புதிய கட்டிடங்களை மாநில அமைச்சர் திரு. கோவி செழியன் இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தை எயிட்ஸ் இல்லாத மாவட்டமாக உருவாக்க, போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று ஆட்சியர் திரு. தர்பகராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து நாளை முதல் இம்மாதம் 31ஆம் தேதிவரை தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் உள்ள சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலில், மார்கழி மாத பிறப்பை முன்னிட்டு, ஏராளமான பக்தர்கள் வழிபட்டனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் இன்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில், இந்தியா 315 ரன் வித்தியாசத்தில் மலேசியாவை வென்றது.

முன்னதாக, முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 408 ரன் எடுத்தது.

இந்தியாவின் Abbigyan Kundu அபாரமாக ஆடி 209 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

409 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தொடர்ந்து களமிற்கிய மலேசியா, 32 புள்ளி ஒரு ஓவரில் 93 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியாவின் Deepesh Devendran 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

>>>>>><<<<<<

சேலம் பெரியார் பல்கலைக் கழக கல்லூரிகளுக்கு இடையே இன்று தொடங்கிய விளையாட்டுப் போட்டிகளில் 500-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

>>>>>>END<<<<<<